**கட்டுவன பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

-------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3.2 மற்றும் 1.3.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டுவன பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் நிறைவேற்றப்பட்ட ரூபா 1,472,791 கூட்டுத்தொகையான 2 நிர்மாண வேலைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் இரண்டு நிர்மாண வேலைகளுக்குரித்தாக செலுத்த வேண்டிய ரூபா 42,869 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) ரூபா 58,621 கூட்டுத்தொகையான 8 கடன்பட்டோர் மீதிகளும் ரூபா 102,850 ஏன எரிபொருள் கடன் கொள்வனவும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஈ) ரூபா 16,650,664 கூட்டுத்தொகையான சொத்துக்கள் மூலதனமாக்கப் படாதிருந்ததுடன், 4 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 08 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 354,395 ஆன சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

(i) நீண்டகாலமாக இருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 607,693 தொகையான வீதி விளக்கு மானியங்கள், ரூபா 4,366,901 தொகையான நீர்க் கட்டண வருமானம், ரூபா 97,763 தொகையான ஆதனக் கடன் வட்டி மற்றும் ரூபா 10,000 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதிக்ளஎன்பவற்றை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 14 ஊழியர்களிடமிருந்து வருடக் கணக்காக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 204,085 கூட்டுத்தொகையான கடன்தொகை தொடர்பாக 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08/பொது(i) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குரிய ரூபா 10,642,889 கூட்டுத்தொகையான நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் மீதி மற்றும் 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 1,033,158 ஆன செலவினக் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வுசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 6,241,976 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களும் ரூபா 1,049,750 கூட்டுத்தொகையான காணி தொடர்பான உரித்துறுதி மற்றும் உரித்தை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றைப் பரீட்சித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 184,784 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | காலாவதியான ரூபா 591,910 ஆன வைப்பு மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,556,232 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,772,301 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 216,069 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய இரண்டு ஆண்டுகள் உட்பட மீளாய்வாண்டின் போதும் சுயமான வருமான உழைப்பு அளவை விஞ்சி மீண்டெழும் செலவினங்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

(ஆ) சபைக்கு வருமான மானியம் கிடைக்கப்பெறாத போது சபையின் வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு எவ்வித வகையிலும் இயலுமை கிடைக்காத போதிலும், செலவினத்தைக் குறைப்பது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி பிரதேசங்கள் இனங்காணப்பட்டு பெயரிடப்பட்டு, அதன் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொண்டு வீதவரியை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 வாடகை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,875,076 தொகையான நிலுவைக் கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 மித்தெனிய கடைத் தொகுதி கட்டிடத்தின் முதலாவது மாடியின் 21 ஆம் இலக்கம் முதல் 25 வரையான கடைகளையும் இரண்டாவது மாடியினையும் உணவு விடுதியொன்றாக பராமரித்துச்செல்வதற்காக குத்தகைக்கு வழங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் 177 ஆம் விதியின் பிரகாரம் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை பின்பற்றப்படாமல் இரண்டாவது மாடி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) குத்தகைக் காலம் 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 173 பிரிவின் பிரகாரம் குத்தகையாளருடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 04 ஆம் திகதியின் பிரகாரம் 25 ஆம் இலக்க கடைக்காக 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை ரூபா 200,000 தொகையை பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரண்டாவது மாடி மற்றும் கடை அறையொன்றுக்காக மாதாந்த மதிப்பீட்டு வாடகை முறையே ரூபா 10,000 தொகை மற்றும் ரூபா 400 வீதம் 25 மாதங்களுக்காக குறைவாக அறவிடப்பட்டமையால் சபைக்கு ரூபா 300,000 வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

**2.3.4 இயந்திர உபகரண வருமானம்**

சபைக்கு இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்குவதற்காக ரூபா 955,026 தொகை அறவிடப்பட வேண்டியதுடன், முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 652,837 தொகை மற்றும் 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 16,400 தொகை இந்நிலுவை வாடகைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 453,306 தொகையான நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 5,015,470 தொகை முத்திரைக் கட்டணமாகவும் கிடைக்க வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல் மதிப்பீடு**

மூலதனச் செலவினத்திற்காக பாதீட்டின் மூலம் 3 செலவின விடயங்களின் கீழ் ரூபா 1,050,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டினுள் நிதிஏற்பாட்டைப் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் ஆண்டின் இறுதியில் மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

**மிகை நிதியை முதலீடு செய்யாமை**

மீளாய்வாண்டினுள் நீர்க் கணக்கு, சந்தைக் கணக்கு மற்றும் செயற்பாட்டுக் கணக்குகளில் மாதாந்த சராசரி முறையே ரூபா 1,217,299, ரூபா 903,390 மற்றும் ரூபா 2,969,406 உடன் கூடிய மிகை காசு மீதிகள் காணப்பட்ட போதிலும், அந்நிதியை முதலீடு செய்து மேலதிக வருமானத்தை உழைத்துக் கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**3.3.1 மித்தெனிய சந்தை நிர்மாணம்**

ரூபா 27,489,444 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மித்தெனிய சந்தை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 771,948 செலவில் மழைப் பீலி போடப்பட்டிருந்த போதிலும், போதியளவு துணை கம்பி மற்றும் வடிம்பு போடப்படாமையால் மழைப் பீலி வளைந்தும் நொருங்கியும் காணப்பட்டது.

(ii) கட்டிடங்களின் நிலத்தின் சில இடங்கள் வெடித்திருந்ததுடன், ரூபா 381,997 செலவில் கட்டிடங்களின் பகுதிகளை வேறாக்குவதற்காக பிளொக் கற்களினால் அமைக்கப்பட்ட சுவர்களில் கோடுகள் மற்றும் வெடிப்புக்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) அனைத்து உப பாகங்கள் மற்றும் ஆதாரங்களுடன் 2000 லீற்றர் பிளாஸ்ரிக் நீர்த்தாங்கியொன்று வழங்கி பொருத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு ரூபா 50,000 பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சந்தைக்குரிய இடதத்தில் நீர்த் தாங்கியொன்று பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) சமூக பங்களிப்புடன் நிறைவேற்றப்பட வேண்டிய புற்தரை இடும் செயற்பாட்டிற்காக ரூபா 121,526 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், சமுதாய பங்களிப்புடன் நிறைவேற்றப்பட வேண்டிய ரூபா 1,017,000 தொகையான 7 செயற்பாடுகள் 2015 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 செப்தம்பர் மாதம் வரையில் சந்தையில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் மாதம் 29 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் தனியார் காணியொன்றிலும் புரதான பாதையின் இரண்டு பக்கங்களிலும் சந்தைகள் நடாத்தப்பட்டிருந்தன.

**3.3.2 ரிட்டிகஹயாய குளத்திற்கு அருகில் வேலி அமைத்தலும் அங்குள்ள பூங்காவில் அலங்காரப்படுத்தலும்**

ரூபா 1,262,036 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்நிர்மாணம் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) இரண்டு குப்பை கூடங்களை வழங்கி பொருத்துவதற்காக ரூபா 35,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், குப்பை கூடங்கள் வழங்கி பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 26.82 மீற்றர் நீளத்தில் கம்பி வேலியொன்றை அமைப்பதற்காக ரூபா 35,402 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 10 கம்பித் தூண்கள் நடப்பட்டிருந்ததுடன், கம்பி வேலி அமைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 32,000 செலவில் பூங்காவில் பொருத்தப்பட்டிருந்த வட்ட மேசையொன்றும் 04 கதிரைகளுடன் கூடிய 4 தொகுதிகளில் 16 கதிரைகள் உடைந்திருந்தன.

(iv) மதிப்பிடப்பட்ட செலவில் பெற்றுக்கொள்ளக்கூடிய 5 சதவீத சமுதாய பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 31 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,352,000 ஆன மொத்த நிதி ஏற்பாடும், இன்னும் 2 செலவின விடயங்களில் வரையரை விஞ்சி ரூபா 9,104,393 ஆன செலவினமும், 02 வருமான விடயங்களில் அடைந்து கொள்ள முடியாத ரூபா 5,731,714 தொகையான இலக்கும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினைச் செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் மூலம் பற்றாக்குறையாக இனங்காணப்பட்ட 45 வகைகளுக்குரிய 159 விடயங்களின் பெறுமதியை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரை அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தீர்வுசெய்யப்படாத பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 21,099,124 ஆக இருந்ததுடன் அதில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 11,676,046 தொகையான பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்